Registered No. M-4483

Madras War Review { TAMIL 7-1-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம்ஞு ஜனவரிமீ 7உ, வெள்ளிக்கிழமை இதழ் 18

எதிரிகளை அரண்கள் வளைகின்றன

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்.

நாம் தாக்கிக் கொண்டிருக்கிறோம். நமது எதிரிகளை அரண் போன்ற நம் படைகள் ஈவிரக்கமின்றி வளைந்து கொண்டு வருகின்றன. புதிய பெருந் தாக்குதல்களுக்கு நமது ஆயுதந் தாங்கிய படைகள் திரண்டு கொண்டிருக்கின்றன. அதன் பயனாக, அச்சு அக்கிரமக் காரர்கள் வீழ்ச்சியடைவார்கள்.

இராணுவப் போராட்டத்தையடுத்து எற்படக் கூடிய மற்றொரு வகைப் போராட்டத்தைக் குறித்தும், நேச நாட்டினர் கவனம் செலுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். நோய், ஊட்டக் குறைவு, வேலையில்லாத் திண்டாட்டம், முதலிய பல வகைப் பொருளாதார சமுதாயத் தொல்லைகளோடு போராடுவது தான், அந்தப் போராட்டம்.

எதிர் காலத்தில் அக்கிரமங்களுக்கு நாம் உள்ளாகாதபடி நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் ; எல்லா இடங்களிலும் நாடுகளின் மக்களும் தனிப்பட்டவர்களும் நடத்தும் வாழ்க்கை யின்பம் பெருக வேண்டும். இவற்றின் பொருட்டு, யுத்த காலத்தில் நாமடைந்த பரஸ்பர, நன்மைக்கான கூட்டுறவை, இனி எற்படப் போகும் சமாதான காலத்திலும் தொடர்ந்து கையாள வேண்டும்.

நாம் மேற் கொண்டுள்ள வேலை மகத்தானது என்று நாம் காணும் போது, போர்க்களத்தில் முடிவான வெற்றி யடையும் பொருட்டும், சமாதானத்தை நாடும் நாட்டு மக்கள் அனைவரும் இன்னும் பல தலை முறைகள் வரை சமாதானத்தோடும் பாதுகாப்போடும் வாழ்வதற்கான தோர் சர்வ தேச ஸ்தாபனம் ஒன்றை அமைக்கும் பொருட்டும், இந்தக் கூட்டுறவைத் தொடர்ந்து கைக் கொள்ளுவதாக நாம் உறுதி செய்து கொள்ளுவோமாக !

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் விடுத்த புது வருஷச் செய்தி.

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

சேலம் ஜில்லா

உணவு தானியங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் உணவு தானிய டிப்போக்கள் மூலமாகவும் பொது ஜனங்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைத்து வருகிறது. பங்கீட்டு முறை சம்பந்தமான பூர்வாங்க வேலைகள் முடிவடைந்ததும், பங்கீட்டு முறை அநேகமாக அடுத்த மாதத்திலிருந்து அமுலுக்கு வரலா மென்று எதிர் பார்க்கப்படுகிறது. விறகு, மண்ணெண்ணெய், சர்க்கரை முதலியவை கஷ்டமின்றி கிடைத்து வருகின்றன.

ஸ்ரீமதி பெட் அம்மையார் ஆதரவின் கீழ் வழக்கம் போல் கலெக்டர் ஆபீசில் ஏழை மக்களுக்கு அன்ன மளிக்கப்பட்டு வருகிறது.

ஜில்லா ராணுவ போர்டாரும், தேசியப் போர் முனை உத்தியோகஸ்தர்களும், பட்டாளத்தி லிருக்கும் சிப்பாய்களின் குடும்பத்தார்களுக்கு வேண்டிய உதவியும், குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்க வசதிகளும் செய்து வருகிறார்கள்.

ஆத்தூர்

இத் தாலூகாவிலுள்ள அநேக குடியானவர்களுக்கு அரசாங்கத் தரிசு நிலங்களைத் தீர்வையின்றி சாகுபடி செய்யவும், புழைக் கடைகளில் தீர்வையின்றி காய் கறிகள் பயிரிடவும், அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, இலாகா உத்தியோகஸ்தர்கள் உணவுப் பயிர்களை அதிகப்படுத்தும் விஷயத்தில் சிரத்தை யுடன் ரெவின்யூ அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வருகிறார்கள்.

நாமக்கல்

இந் நகரில் டிசம்பர் மாதம் 11-ந் தேதி தாலூகா ராணுவ போர்டு அங்கத்தினர்கள் கூடி சிப்பாய்களின் குடும்பத்தார்களுக்குள்ள குறைகளைப் பற்றி விசாரித்தும், அவர்களுக்கு உதவிபுரிய ஏற்பாடுகள் செய்தும் வருகிறார்கள். இத் தாலூகாவிலுள்ள சிப்பாய்களின் உறவினர்களுக்கு, இலவசமாகக் கல்வி பயில வசதிகளும் செய்திருக்கிறார்கள்.

தங்கினிகோட்டை

இந்த சப் தாலூகாவில் அதிகமான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்வதற்காக ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமிக்கப் பட்டிருக்கிறார். தற்காலிகமாக சர்க்கார் தரிசு நிலங்களைக் குடிகளுக்கு அடமானம் செய்ய, ரெவின்யூ அதிகாரிகளால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த சப் தாலூகாவைச் சேர்ந்த கேலமங்கலம் பிர்க்காவில் 2,992 எக்கர் நிலம் ஏழைக் குடிகளுக்கு உணவு தானியங்கள் பயிரிடுவதற்காக அரசாங்கத்தாரால் அடமானிக்கப் பட்டிருக்கிறது.

இந்த சப் தாலூகாவில் வேண்டிய அளவு நெல்லும், ராகியும் அறுவடை யாகியிருப்பதால், உணவு தானியங்களைப் பற்றிய கஷ்டம் இல்லை.

இராமநாதபுரம் ஜில்லா

உணவுப் பொருள்.—உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துவரப்படுகிறது. ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், அறுப்புக்கோட்டை, காரைக்குடி, தேவக்கோட்டை முதலிய இடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள ஏழை மக்கள் டிப்போக்கள் பொது ஜன நன்மையைக் கருதி, திருப்திகரமாக வேலை செய்கின்றன. இருந்தபோதிலும் இன்னும் இந்த ஜில்லாவுக்கு உணவுப் பொருள் போதாததாக இருக்கிறது. உணவுப் பொருள்கள் அதிகம் விளைச்சல் இல்லாத இந்த ஜில்லாவுக்கு, தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்படும் பங்கீடு போத வில்லை. இருக்கும் உணவுப் பொருள்கள் சமத்துவமாக ஜனங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. கடற்கரை யோரங்களில் உணவுப் பொருள்களை கள்ளத்தனமாக மற்றைய நாடுகளுக்குக் கொண்டு போகும் தந்திரங்களை இதற்கென ஏற்பட்டிருக்கும் விசேஷ ரெவினியூ அதிகாரிகள் கண் காணித்தும், கடினமாகக் கண்டித்தும் வருகிறார்கள்.

மற்றைய அவசியப் பொருள்கள்.—மண்ணெண்ணெய், சீனி முதலியவைகளின் கட்டுப்பாட்டு உத்தரவுகள் அமுலில் இருந்து வருகின்றன. மீறி நடப்பவர்களைத் தகுந்த தண்டனைக் குள்ளாக்குகிறார்கள். இவைகளைப் பற்றிய பொது ஜனப் புகார் ஒன்றுங் கிடையாது.

மலிவு துணித் திட்டம் வெற்றிகரமாக வேலை செய்கிறது. தோட்டி முதல் தொண்டமான் வரை அத் துணிகளை வாங்கி இன்புறுகிறார்கள். ஏனெனில் அவை விலை குறைவாகவும் நீடித்த உழைப்புடையனவாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். தேசியப் போர் முனை இந்த விஷயத்தில் ஊக்கத்துடன் வேலை செய்கிறது. விறகு எல்லோருக்கும் கிடைக்கிறது.

பர்மா முதலிய கீழ் நாடுகளிலிருந்து சரண்புகுந்தோர் பிரச்சினை.— இந்தப் பிரச்சினை இப்பொழுது குறைந்து விட்டது. பிரசாரம் மூலமாக, சரண் புகுந்தவர்கள் கையில் பொருளிருந்தும், படி வாங்கும் இழி தன்மையைக் கடினமாகக் கண்டித்து வருகிறது தேசியப் போர் முனை.

கோயமுத்தூர் ஜில்லா

"உணவுப் பொருள்" அதாவது அரிசி கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டு, ஈரோடு முனிசிபல் எல்லைக்குட்பட்ட இடங்களிலும் அதைத் தவிர கொல்லம்பாளையம், சூரம்பட்டி, வீரப்பன் சத்திரம், வைராபாளையம், கிருஷ்ணம்பாளையம் முதலிய இடங்களிலும், 1943-ம் ஆண்டு டிசம்பர் மீ 5உ முதல் "அரிசி பங்கீடு முறை" அமுலுக்கு வந்து யாதொரு கஷ்டமுமின்றி நடந்து வருகிறது.

கோயமுத்தூர் டவுனில் சுமார் 70 வியாபாரிகள் மூலமாக ஜனங்களுக்கு அரிசி விற்கப்பட்டு வருகிறது. கோவை டவுனில் உள்ள மக்களுக்கு அரிசி போதுமான அளவு கிடைத்து வருகிறது. கிராமங்களிலும் ஜனங்களுக்கு அரிசி, சோளம், ராகி முதலிய உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சண்டைக்குச் சென்றிருப்பவர்களின் குடும்பங்களுக்கு போதுமான அளவு உணவுப் பொருள் சப்ளை செய்யப்படுகிறது. துவரம் பருப்பு பட்டணம் படியால் $1\frac{3}{8}$ படி வீதம் கண்ட்ரோல் விலைப்படி விற்கப்படுகிறது.

கோபி தாலூக்காவில் கோபி தாசில்தார் டிவிஷனில் மேட்டுப்பாளையம், கூகலூர், கொண்டையம்பாளையம், தூக்காநாய்க்கன்பாளையம், கொம்பநாயக்கன்பாளையம், அரசூர், நம்பியூர், கோபி, முதலிய இடங்களில் நியாய விலை டிப்போக்கள் ஸ்தாபிக்கப்பட்டு நடை பெறுகின்றன. கோபி தாலூக்காவில் பட்டாளத்திற்குச் சென்றவர்களின் சுமார் 153 குடும்பங்களுக்கு உணவு தானியங்கள் வாங்க "ஸ்பெஷல் பெர்மிட்டு"கள் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள்.

"ஸ்டாண்டர்டு கிளாத்" துணி மணிகளின் விற்பனை சரிவர நடந்து வருகிறது. இது, ஏழைகளுக்கு மிகவும் உபகாரமாக இருந்து வருகிறது.

வட ஆற்காடு ஜில்லா

இந்த ஜில்லாவில், பொது மக்களுக்கு உணவுப் பொருள்கள் கஷ்டமின்றி சுலபமாகக் கிடைக்கும்படி நம்முடைய அரசாங்கத்தார் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். பொதுவாக, இங்கு மக்கள் நல் வாழ்க்கை நடத்துவதாகவே கூறலாம். அரிசி மண்ணெண்ணெய் முதலிய முக்கியமான பொருள்கள் சுலபமாக மக்களுக்குக் கிடைக்கின்றன.

சிப்பாய் குடும்பங்களுக்குச் சிறந்த வகையில், ஜில்லா சிப்பாய் குடும்பப் பாது காப்புக் கமிட்டியாரும், தேசியப் போர் முனைப் பணியாளர்களும், நற்சேவை புரிந்து வருகின்றனர். வீரர்களை நற் பணிக்கு அனுப்பும் ஆர்வங் கொண்டு திகழ்கிறது. போர்ப் புகழ் பெற்ற இந்த ஜில்லா, போர் வீரர்களின் குடும்பப் பாது காப்பிலும், குன்று ஊக்கமும், உழைப்பும் கொண்டுள்ளனர் அரசாங்க அதிகாரிகளும், பொது நலத் தொண்டர்களும். சிப்பாய் குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் சுலபமாய் இடைஞ்சலின்றிக் கிடைக்கும்படி செய்ய, ஜில்லா சிப்பாய் குடும்பப் பாதுகாப்புச் சபையார் (District Soldiers Board) இது வரை சிப்பாய் குடும்பங்களுக்கென, வேலூர், ஊசூர், வல்லம் (கண்ணமங்கலம்), பள்ளி கொண்டை, ஆம்பூர், முதலிய இடங்களில் உணவுப் பொருள் டிப்போக்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த டிப்போக்கள் சுமார் 15,388 சிப்பாய் குடும்ப நபர்களுக்கு உணவுப் பொருள்கள் சப்ளை செய்து வருகின்றன. மேலும், அனேக டிப்போக்கள் ஜில்லாவில் திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சென்ற 23—12—43 தேதி, மேன்மை தங்கிய மாகாண கவர்னரின், பிரதம ஆலோசகர் ஸர் ஹூட், கெ.ஸி.ஐ.இ., ஸி.எஸ்.ஐ., ஐ.ஸி.எஸ்., அவர்கள் ஆரணியில் இத்தகைய ஒரு டிப்போவைத் திறந்து வைத்தார். அவ்வமயம், ஜில்லா கலெக்டர் அவர்களின் சிறந்த யுத்த சேவையையும், இந்த ஜில்லாப் பொது மக்களின் போர்ப் பணியையும், மிகவும் போற்றினார். நம்முடைய மேன்மை தங்கிய மாகாண கவர்னர் பிரபு அவர்கள் 8—10—43 தேதி வேலூர் விஜயம் செய்த காலை, ஜில்லா சிப்பாய் குடும்பப் பாதுகாப்புச் சபையார் ஆபீசை அன்புடன் பார்வை யிட்டார். அப்போழுது ஆபீஸ் குறிப்பேட்டில் அவர் விடுத்துப் போன செய்தி வருமாறு :—

> "இந்த ஜில்லா சிப்பாய் குடும்பப் பாது காப்பு சபை ஆபீசுக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எத்தகைய நல்ல சேவை இங்கு நடந்து வருகிறது என்பது எனக்குத் தெரியும். நான் இதில் பங்கெடுத்துள்ள எல்லோரையும், மனமுவந்து பாராட்டுகிறேன்."

கவர்னர் பெருமானின் இவ்வினிய சொற்கள், ஜில்லாக் கலெக்டர் அவர்களின் உன்னத உழைப்பையும், சிப்பாய் குடும்பப் பாது காப்பு சபையார், தேசியப் போர் முனையாளர்கள், இன்னும் ஜில்லாப் பொது மக்கள் ஏனையோரையும், போற்றும் பாராட்டுச் சொற்களாகும். போர்ப் பணியில், இனியும் உறுதியுடன், ஊக்கம் குன்றது உழைப்போமாக ! உண்மை வெற்றி காண்போமாக !

உணவுப் பொருள்களை ஊக்கமாய்ப் பயிர் செய்
கணமும் சேமிக்க கனவிலும் கருதாதே
மிதச் செலவே, மாண்புத் தரும்
படையினர்க் குதவுதல், உடையவர் கடனே

எல்லோருக்கும் நலனுண்டாக்க வழி

இப்போது அதிகச் செலவானால், பிறகு திண்டாட நேரும்

அரசாங்கம் மக்களுக்குச் செய்யும் நன்மை

இந்தியாவுக்குப் பிற நாடுகள் கொடுத்துள்ள கடன்—பிற நாடுகளுக்கு இந்தியா கொடுத்துள்ள கடன்—இவற்றை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ளும் முறை—இந்தப் போர் காலத்தில் பணத்தை சேமிக்க வேண்டியதன் அவசியம், முதலிய வற்றை விளக்கி, சேலம் ஜில்லா தேசியப் போர்முனை யமைப்பாளர் மிஸ்டர் எஸ். நித்தியானந்தம் அவர்கள் திருச்சினாப் பள்ளி வானொலி நிலையத்தி லிருந்து டிசம்பர் மாதம் 21-ம் தேதி ஒலி பெருக்கிய சொற் பொழிவாவது :—

சென்னை அரசாங்கத்தார் 1943-ம் டிசம்பர் 13உக்குள்ளாக இம்மாகாண வாசிகள் 10 கோடி ரூபாய் 1953–55 வருஷ மூன்று சத விகித பாதுகாப்புக் கடன் பத்திரங்கள், தபாலாபீஸ் தேசிய சேமிப்புப் பத்திரங்கள், தபாலாபீஸ் பாதுகாப்பு சேம நிதி, வட்டி யில்லாக் கடன் பத்திரங்கள் முதலியவைகளில் சேர்த்து வைக்க வேண்டும் என்று கூறி யிருக்கிறார்கள். இதை யொட்டி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், யுத்த முயற்சியை ஆதரிக்கும் உத்தியோகஸ்தர் அல்லாதார் யாவரும், இத் தொகையை வசூலிப்பதில், சில காலமாக தீவிரமாக உழைத்து வருகிறார் கள். இதுவரை வசூலான தொகையே 9 கோடிக்கு மேலாகி விட்டது. பொது ஜனங்கள் தாராளமாகப் பணம் கொடுத்து வருகிறார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது. ஆயினும் இப்பொழுது இங்ஙனம் தொகைகள் வசூலிப்பதின் நோக்கங்களைப் பற்றியும், பலன்களைப் பற்றியும் எல்லோ ரும் முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டு மென்ற எண்ணத் தால், இவைகளைப் பற்றி சுருக்கமாக உள்ள கால அளவிற்குள் பேச விரும்புகிறேன்.

நாட்டில் பணப் பெருக்கத்தின் காரணமாக, சாமான்களின் விலை வாசி கள் ஏறிக்கொண்டே போவதைத் தடுப்பது.

பணப் பெருக்கமும் சாமான்கள் குறைவும்

தற்பொழுது நடக்கும் யுத்தத்தினால், நாட்டில் பணப் பெருக்கமும், சாமான்கள் குறைவும் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தங் காரணமாக பிரிட்டி ஷாரும், அமெரிக்கரும் ஏராளமான மூலப் பொருள்கள் முதலியன நம் நாட்டிலிருந்து பெறுகிறார்கள். இவைகளுக்குப் பதிலாக, சாதாரண காலமா யிருந்தால், அந்நாடுகளில் உற்பத்தியாகும், நமக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்திருப்பார்கள். ஆனால், இப்பொழுது அந்நாடு களில் சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய் வதை மிகக் குறைத்து, சண்டைக்கு வேண்டிய பொருள்களையே பெரும் பாலும் உற்பத்தி செய்கிறார்கள். ஆதலால், நம்மிடம் பெறும் பொருள் களுக்குப் பதில் பொருள்கள், இவர்கள் கொடுப்பதற் கில்லை. மேலும் ஏதோ சில பொருள்கள் இருப்பினும், அனேகமாக இவர்கள் வசமுள்ள எல்லாக் கப்பல்களையும், பல யுத்த அரங்கங்களுக்கு, ஆட்கள் கொண்டு போவதற்கும், அவர்களுக்கு வேண்டிய யுத்தத் தளவாடங்கள், துணிகள், மருந்து சாமான்கள் முதலியன கொண்டு போவதற்கும், பயன் படுத்துவ தால், நமக்கு அவைகளை அனுப்ப இயலாதவர்களா யிருக்கிறார்கள். ஆதலால், நம்மிட மிருந்து பெறும் பொருள்களுக்கு, இங்கிலாந்திலுள்ள மத்திய பாங்காகிய Bank of England-ல் நம் நாட்டில் நோட்டுப் போடும் உரிமையுள்ள ரிசர்வ் பாங்கு கணக்கில் இங்கிலீஷ் நாணயமாகிய ஸ்டர்லிங்கில் செலுத்துகிறார்கள். உடனே இந்த வரவின் ஆதாரத்தின் பேரில், இந் நாட்டில் அந்த சாமான்கள் சப்ளை செய்தவர்களுக்கு, கணக்குப்படி ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் பாங்கார் வெளியிட்டு பட்டுவாடா செய்கிறார்கள். சண்டை யாரம்ப காலத்தில், சுமார் 180 கோடி ரூபாய் நோட்டுகள் நம் நாட்டில் செலாவணி யாகிக் கொண்டிருந்தன. இப்பொழுதோ சுமார் 750 கோடி ரூபாய் நோட்டுகளுக்கு மேல் செலாவணியாகிக் கொண்டிருக் கின்றன. தற்போது நடக்கும் சண்டையை முன்னிட்டு, நம் நாட்டில் இப்போதுள்ள பிரிட்டிஷ் அமெரிக்க துருப்புகளுக்கு ஆகும் செலவை, அவர்கள் சர்க்காரே ஈடு செய்வதும், நம் நாட்டிலும் இந்திய சர்க்கார் இப்பொழுது இராணுவ சம்பந்தமாக சாதாரண காலத்தை விட பன் மடங்கு செலவு செய்வதும், ஓரளவுக்கு மேலே சொன்ன விதமாக நோட் டுப் பெருக்கம் அதிகமாவதற்குக் காரணங்களாகும். மேலும் நம் நாட் டில் யுத்தத்தினால் சாதாரண வாழ்க்கைக் குரிய பொருள்கள் மிகக் குறைந்து விட்டன. ஜர்மனி, ஜப்பான் முதலிய எதிரி நாடுகளி லிருந்து சாமான்கள் வருவதற்கில்லை. ஏற்கெனவே விளக்கியபடி பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து அதிகமாக சாமான்கள் இறக்குமதி யாவதற்கில்லை. நம் நாட்டில் உற்பத்தி யாகும் பொருள்களில் ஒரு பகுதி யுத்தத்திற்காகக் கொள்ளப் படுவதாலும், குறைவேற்பட் டிருக்கிறது. இங்ஙனம் பணப் பெருக்கம் ஒரு புறம், சாமான்கள் குறைவு மற்றொரு புறம், யுத்தத்தினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பணப் பெருக்கத் தால், அதிகமாகும் ஜனங்களின் வாங்கும் சக்தியை, குறைந்து கொண் டிருக்கும் சாமான்களை வாங்க உபயோகப் படுத்துவதால், விலைகள் ஏறிக் கொண்டே போகின்றன. விலைகள் ஏறிக்கொண்டே போவதால் பொருள் களை உற்பத்தி செய்வோரும், வியாபாரிகளும், வாங்குவோரும், பயங் காரணமாகவோ, இலாபங் காரணமாகவோ மிதமிஞ்சி சேமித்து வைக்க முற்படுகிறார்கள். இதனால் விற்பனைக் குரிய சாமான்கள் குறைகின்றன. இக்குறைவால் விலை யேறுகிறது.

கொள்ளை லாபமும் ஏழைகள் துன்பமும்

இங்ஙனம் விலை யேற்றத்தால் சாமான்கள் சேமிப்பும், சாமான்கள் குறைவால் விலை யேற்றமும் மாறி மாறி ஏற்பட ஏதுவாகின்றன. இங்ங னம் விலை வாசிகள் ஏறிக்கொண்டே போனால் நாட்டில் பல மக்கள் அநி யாயமாக துன்புறவும், சிலர் கொள்ளை ஆதாயம் பெறவும் ஏதுவாகி, அமைதி யின்மை முதலியன நிகழும். இதைத் தடுக்க வேண்டியது சமூதாய நன்மையைக் கோரும், ஒவ்வொருவரின் கடமையாகும். இப் பிரச்சினைகள் ஒவ்வொரு நாட்டிலு முள்ளன. சமயோசிதமான முறை களைக் கையாண்டு, அந்தந்த நாட்டார்களும் இந்த நிலையை சமாளித்து வருகிறார்கள். உதாரணமாக இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடு களில் வரிகளை அதிகம் உயர்த்தியும், மக்களிடம் கடன்களை ஏராளமாகப் பெற்றும், விலைக் கட்டுப்பாடு செய்தும், பங்கீட்டு முறையை எல்லாப் பொருள்கள் விஷயத்திலும் அமுல் நடத்தியும், விலை யேறிக் கொண்டே போவதைத் தடுத்திருக்கிறார்கள். சாமான்களை அபரிமிதமாக அதிகப் படுத்தி விட்டாலும், அதிகமாகி வரும் வாங்கும் சக்தியை, சாமான்கள் வாங்க உபயோகப் படுத்தா வண்ணம் செய்து விட்டாலும், இந்நிலையை பரிகரிக்கலாம். ஆனால், யுத்தம் நடக்கும் வரையிலும், நாம் எவ்வளவு விரும்பினாலும், சாமான்களை முன்னம் கூறிய காரணங்களால் வேண்டிய அளவுக்கு அதிகப்படுத்த முடியாது.

விலை உயர்வைத் தடுப்பது எப்படி ?

ஆதலால் அதிகப்படியாகி வரும் வாங்கும் சக்தியை, பொருள்கள் வாங்க இயலா வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டி யிருக்கிறது. இந்நோக்கம் வரியை உயர்த்துவதாலும், பொது மக்களிடம் கடன் பெறுவ தாலும் நிறைவேறும். மாகாண விற்பனை வரி உயர்வு, வருமான வரி உயர்வு, அபரிமித லாப வரி முதலியவற்றால் ஓரளவுக்கு இவ்விதம் நட வடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் உள்நாட்டுப் பொருளாதார அமைப்பை நோக்கு மிடத்து, இவ்வரிகள் மூலமாகவேயே இந்நிலையை சரிபண்ண இயலாது. மேலும் விவசாயிகள் முதலியவர்கள் நலனை உத் தேசித்து, வரிகள் மூலமேயே இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற் கில்லை. ஆதலால், முதலில் குறிப்பிட்ட தற்காப்புக் கடன்கள், தேசிய சேமிப்பு பத் திரங்கள் முதலியவற்றில் விவசாயிகளைப் பணம் போடும்படி செய்து அவர்களிடம் தற்போதுள்ள அதிகப் படியான வாங்கும் சக்தியை சாமான் கள் அதிகம் வாங்கா வண்ணம் தடுக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. இப்படிச் செய்வதால், விலை யேறிக்கொண்டே போவது நிற்கும். நின்றால், சாமான்களை அமுக்கி வைத்தல் நிற்கும் அல்லது குறையும். அப்பொழுது சாமான்கள் கிடைக்கும். எல்லோருக்கும் நலனுண்டாக ஏதுவாகும்.

விவசாயிகளின் நலன்

சென்ற மஹா யுத்த காலத்திலும் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. ஆனால் அதை அவர்கள் இலாபமான வழியில் போட்டு வைக்க வில்லை. சண்டைக்குப் பின்னால், விலை வாசிகள் குறைந்தன. விவசாயிகள் மிகத் துன்புற்றார்கள். சாதாரணமாக விவசாயிகளிடம் பணமிருந்தால், தங்கம், வெள்ளி வாங்கி நகைகள் செய்வதும், நிலம் வாங்குவதும், வீடு கட்டுவதும் அல்லது ஊர்களில் இதர விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதுமே பெரும்பாலும் செய்கிறார்கள். இப்படி இப்பொழுது செய்வதால், விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்ட மேற்படும். இதை அவர் கள் அறிந்து கொண்டு நடப்பவர்களா யில்லை. சண்டைக்கு முன்னால் சுமார் 20 ரூபாய் விற்ற ஒரு பவுன் தற்போது சுமார் 55 ரூபாய் விற்கிறது. 5 அணா விற்ற ஒரு தோலா வெள்ளி, ஒன்றே கால் ரூபாய் விற்கிறது. காரணம் அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து யுத்தங் காரணமாக தங்கம், வெள்ளி வருவதற் கில்லை. யுத்தம் முடிந்த வுடன், அவைகள் வரும். வந்தால் விலைகள் நிச்சயம் குறையும். மேலும் மற்ற சாமான் களின் விலையும் குறையும். அதற் கேற்ப, தங்கம் வெள்ளியின் விலையும் குறையும். ஆதலால் இப்பொழுது பணத்தைப் போட்டு தங்கம் வெள்ளி வாங்கினால், பின்னால் அனேகமாக மூன்றில் ஒரு பங்கு தொகை கூடக் கிடைக்காது. பெருத்த நஷ்ட மேற்படுவது திண்ணம்.

நிலங்களுக்கும் விலை அதிகம்

நிலங்கள் அதிக விலையா யிருக்கின்றன. பல யுத்த காரணங்களால் தானிய விலை அதிகம். அதனால் நில விலையும் அதிகம். சண்டை முடிந்தால் இக்காரணங்கள் இருக்கா. தானிய விலை குறையும். நில விலையும் குறையும்.

இப்பொழுது அதிக விலை கொடுத்து நிலம் வாங்கினால், பின்னால், சண்டை முடிந்த பிறகு, கொடுத்த விலையில் மூன்றில் ஒரு பங்கு கூடப், போவது கஷ்டம். இப்போது வீடு கட்டுவதும் உசிதமில்லை. மரம், இரும்பு, செங்கல், சுண்ணாம்பு, சிமெண்டு முதலியவைகளின் விலைகள் அதிகமா யிருக்கின்றன. இந்நிலையில் வீடு கட்டவேண்டு மானால், சாதா ரண காலத்தில் செலவானதை விட, நான்கு மடங்கு அதிகம் ஆகும். ஆதலால், இப்பொழுது வீடு கட்டுவது பெருத்த நஷ்டத்திற் கேதுவாகும். கடன் கொடுப்பதும் சிலாக்கியமல்ல. இவ்வளவு அகவிலை, நில விலை விற்கின்ற பொழுது, கடனைத் தீர்க்க முடியாத ஒரு விவசாயி, பின்னால் கடன் தீர்ப்பது துர்லபம். அதன் காரணமாக, கோர்ட்டு விவகாரங்கள் ஏற்படும். யுத்தம் முடிந்த பிறகு கடன் பெற்றிருப்பவர்கள் தானிய விலை குறைந்ததை யொட்டி, கடன் மசோதாக்கள் கொணர்ந்து, கடன் பளுவைக் குறைக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்வார்கள். இத்தியாதி காரணங்களால், விவசாயிகளுக்கு, இம்முறையில் பணத்தைப் போட்டு வைப்பது உசிதமல்ல என்பது ‘உள்ளங்கை நெல்லிக்கனி’ போல் விளங்குகிறது.

என்ன செய்ய வேண்டும் ?

ஆதலால், தற்காப்புக் கடன்கள் முதலியவற்றில் பணத்தைப் போட்டு வைக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. இவைகளில் பணம் போட்டு வைத் தால், பந்தோபஸ்துக்குப் பந்தோபஸ்து, இலாபத்துக்கு இலாபம். பின் னால் சாமான்களின் விலை குறைகிற காலத்தில் தொகையைப் பெற்று, சாமான்கள் பெற்றால், அதிக இலாபமாக வாங்க ஏதுவாகும்.

சிக்கன வாழ்வின் அவசியம்

விவசாயிகள் அல்லாதவர்களும், சாமான்களின் விலை அபரிமிதமாக இருக்கும் இச்சமயம் வாங்காமல் சேர்த்து வைத்து, யுத்தத்திற்குப் பிறகு, சாமான்கள் விலை குறைகின்ற காலத்து பெற்றால், இலாப மடைவார் கள் என்பது தெளிவு. ஆதலால் அவர்களையும், எவ்வளவு சிக்கன மாக வாழ்க்கை நடத்த முடியுமோ அவ்வளவு சிக்கன வாழ்வு நடத்தச் செய்து, பணங்களை இவ்வகையில் சேமித்து வைக்கச் செய்தல் அவர் களுக்கு நன்மையாகும்.

வரி உயர்வைத் தடுப்பது எப்படி ?

யுத்தம் நடக்கிறது. சர்க்காருக்கு ஏராளமான செலவு ஆகிறது. இவ் வதிகச் செலவை இரண்டு வழிகளில் தான் ஈடு செய்யலாம். ஒன்று வரிகளை உயர்த்திக் குடிகளிடமிருந்து பணம் பெறுதல்; மற்றொன்று பொது மக்களிட மிருந்து கடனாகப் பெறுதல். வரியாகக் கொடுத்தால்

கொடுத்தவர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. கடனாகக் கொடுத்தால் வட்டியோடு திரும்பி வருகிறது. இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஏராளமாக யுத்தத்தில் செலவாகிறது. மேற்கண்ட இரண்டு முறைகளிலும் அனேகமாகச் சமமாகப் பணம் பெற்று செலவை ஈடு செய்கிறார்கள். இந்நாட்டின் பொருளாதார அமைப்பையும், நிலைமையையும் நோக்கியும், விவசாயிகள் போன்ற பிரதம உற்பத்தியாளர்களுக்கு இதுகாறும் சரியான ஆதாயம் கிடைக்காது போயிற்று என்ற விஷயத்தை உன்னியும், வரிகள் முறையை நினைத்தும், சர்க்கார் வரிகள் மூலமாகவே அதிகப்படியான செலவு பூராவையும் ஈடு செய்ய விரும்பவில்லை. ஆதலால் கடன்கள் தாராளமாக வழங்குவதால், வரி உயர்வுகள் ஓரளவுக்கு அதிகப்படாமலிருக்க ஏதுவாகிறது.

தர்ம யுத்தத்திற்கும் நம் நன்மைக்கும் உதவி

இச்சண்டையை நம் கக்ஷியார்கள் ஆரம்பிக்கவில்லை. ஜெர்மனியர் ஐரோப்பியாவிலும், ஜப்பானியர் சைனாவிலும், தெற்கு பசிபிக்கிலும், சண்டையை ஆரம்பித்தார்கள். இதனால், ஜர்மானியரும் ஜப்பானியரும் அநியாயமாக பிறரை வலுச் சண்டைக்கு இழுக்கிறவர்கள் என்பது தெளிவு. இவர்களை அடக்காவிட்டால் எந்த நாடும் நிம்மதியாயிருக்க முடியாது, என்பது சென்ற 25 வருட சரித்திரத்தைக் கூர்ந்து படித்தால், எளிதில் புலனாகும். நியாயம், தர்மம், சுதந்திரம் யாதும் நிலவ முடியாது. மேலும் இவர்கள் கொள்கைகளையும், செயல்களையும் கூர்ந்து நோக்கின், இவர்கள் ஜெயிப்பதால், மற்ற தேசங்களின் அரசியல், பொருளாதார, சமூக, மதத்துறைகளில் பலவிதமான சொல்ல முடியாத, நினைக்க முடியாத அக்கிரமங்கள் நேரிடும் என்று திண்ணமாகச் சொல்லலாம். இன்று ரஷ்யாவிலும், சைனாவிலும், இவர்கள் செய்திருக்கும் அநீதிகளை நினைக்க மனந் திடுக்குறுகின்றது. யாரும் பேச முடியாது. "இம்மென்றால் சிறைவாசம்—ஏனென்றால் வனவாசம்" பெரிய உத்தியோகங்களை, அவர்கள் ஜெயித்த நாடுகளில் தங்கள் ஆட்களுக்கே கொடுக்கிறார்கள். தொழிற்சாலைகளை யெல்லாம் தாங்களே வைத்துக் கொள்ளுகிறார்கள். நல்ல நிலங்களைப் பிடுங்கி, தங்கள் ஆட்களுக்குக் கொடுக்கிறார்கள். தங்கம், வெள்ளி முதலியவற்றை கொள்ளை கொள்ளுகிறார்கள். ஆதலால் இவர்களை எதிர்த்துப் போராடுவது தர்மமாகிறது. இத்தகைய கஷ்ட நஷ்டங்களுக்கு இந்தியா உள்ளாகாதிருக்க வேண்டுமென்றால், அச்சு நாட்டாரைத் தோற்கடித்தாக வேண்டும். அவர்களைத் தோற்கடிக்க வேண்டுமானால், யுத்தத்தில் எல்லாரும் முனைந்து வேலை செய்ய வேண்டும். பட்டாளத்தில் சேர்ந்து பணிபுரிய நம்மால் ஏது காரணத்தாலோ இயலாமற் போனாலும், நம்மில் ஒவ்வொருவரும் சக்தியானுசாரம் பணம் கடனாகக் கொடுத்தாவது தர்மத்தையும், நம் நாட்டு நன்மையையும் பாதுகாக்க உதவ வேண்டும்.

தேச அபிவிருத்திக்கு ஏது

ஒரு நாட்டு மக்களின் எல்லா சக்திகளும் பரிணமிக்க வேண்டுமானால், நாட்டில் எல்லாவகைத் தொழில்களும் நிலவ வேண்டும். ஆதலாலேயே திருவள்ளுவர், "நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல நாட வளந்தரு நாடு" என்றனர். எல்லா விதத் தொழில்களும் உண்டாகிச் செழிக்க வேண்டுமானால், நாட்டு மக்களின் சேமிப்பை இவைகளை உண்டாக்க ஓங்கச் செய்ய பயன் படும் முறையில் போட்டு வைக்க வேண்டும். நம் நாட்டில் சேமிப்பு இருக்கிறது. பொருளும் இருக்கிறது. ஆனால் சேமித்த பொருளை, சேமித்தவர்களுக்கும், தேசத்துக்கும் இலாபமான முறையில் போடுகிற பழக்கமில்லை. சாதாரணமாக, அனேகர், முக்கியமாகக் கிராமத்தவர்கள், தங்கம், வெள்ளி வாங்கி நகை செய்து வைக்கிறார்கள். கடன் வாங்கிக் கூட நகை செய்கிறார்கள். இப்படிச் செய்வதால் இவர்களுக்கு இலாபமில்லை. இந்த வகையில் பணத்தைச் செலவு செய்வதால், தேசத்துக்கும் நலமில்லை. இதை நிறுத்தி அல்லது மிகக் குறைத்து பணங்களைப் பாங்குகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், சர்க்கார் கடன்கள் முதலியவற்றில் போட்டால், இவர்களுக்கும் லாபம். இப்பணங்கள் பொருளாதாரத் துறையில் இலாபமுள்ள காரியங்களுக்குப் பயன் படுத்தப் பெற்று, தேசத்தில் தொழில், வியாபார அபிவிருத்தி ஏற்படவும், பலர் வேலை பெறவும், ஏதுவாகிறது. இப்பழக்கம் நிலவ வேண்டுமானால், நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் இம் முறையில் பணங்களைப் போட்டுத் திரும்பப் பெறும்படி செய்யவேண்டும். செய்தால் நம்பிக்கை உண்டாகும். பிறகு நகையிலேயே பணம் போடுவது குறையும். மேலும் இவ்விதம் பணம் போட்டு வைப்பதால் ஓரளவுக்கு பயமின்றி நிம்மதியாகவும் சுகமாகவும் வாழவும், தாங்கள் குறைந்த வட்டியிலும் எளிதிலும், வேண்டுமென்றால் கடன் பெறவும் ஏதுவாகும்.

ஜனநாயக அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்ய ஹேது ?

யுத்தத்திற்குப் பிறகு, ஜனநாயக சர்க்கார் வந்த போதும் ஜனங்களுக்கு தங்கள் சேமிப்பில் ஓர் பகுதியைச் சர்க்காருக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்ற பழக்கம் வந்தால் தான், அந்த சர்க்கார், சில கோடீஸ்வரர்கள் தயவை எதிர் பார்த்து காரியங்கள் செய்யவேண்டிய அவசியமில்லாமல், வரி விஷயங்களிலும், செலவு முறைகளிலும் தைரியமாகவும், நியாயமாகவும் நடக்கவும், கல்வி பரப்புதல், ரோடுகள், பாசன வசதிகள் அமைத்தல் முதலிய பொது மக்களின் நலனுக்குகந்த காரியங்கள் செய்யவும் ஏதுவாகும். அப்பழக்கம் வரவேண்டுமானால், ஒவ்வொரு ஊரிலும் சிலராவது சர்க்காருக்குக் கடன் கொடுத்துத் திருப்பிப் பெற வேண்டும். அதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம். நாட்டின் அபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்கள் நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிற நாடுகளுக்குக் கடனாளியாகாம லிருப்பதற் கேது

இதுகாறும் நம் மக்களுக்கு, சர்க்காருக்கு கடன் கொடுக்கும் பழக்கம் போதிய அளவுக்கு இல்லாததால், இந்திய சர்க்கார் ரயில் போடவும், பெரிய நீர்ப்பாசன வசதிகளும் செய்ய கடன் பெற்ற காலத்தில், இங்கிலாந்து நாட்டில் கடன் பெற வேண்டியிருந்தது. இதனால் வருடா வருடம் ஏராளமாக வட்டி நாம் கொடுக்க வேண்டி யிருந்தது. இங்கிலாந்தில் இங்ஙனம் கடன் கொடுத்திருந்தவர்களில் சிலர், பூர்ண சுயராஜியத்துக்கு குந்தமாக தங்கள் பணத்துக்குப் பாதுகாப்புக் கோரி வந்தார்கள். ஆனால் இந்த யுத்தத்தின் விளைவாக அக்கடன்கள் அநேகமாகத் தீர்ந்துவிட்டன. இப்பொழுது நம் நாட்டவர் சர்க்காருக்கு வேண்டிய தொகைகளைக் கடனாகக் கொடுக்காமல், அவர்கள் பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ கடன் பெற நேரிட்டால், நாட்டின் எதிர்கால வாழ்வுக்கு ஓரளவுக்கு இடைஞ்சல் நேரிடும். ஆதலால் தேசாபிமானிகள் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் ஊக்கமாக உழைக்க வேண்டும்.

டெஹரான் மகாநாடு

இராகம்—மோஹனம் தாளம்—ஆதி

பல்லவி

* முதியமும் மூர்த்திகளும் முனைந்து டெரானில் கூடி
முதிர்ந்திடும் நட்பே கொண்டனர்—வெற்றி கண்டனர் (மு)

அனுபல்லவி

நிதியமெரிக்கா ரூஸ்வெல்ட் நிகரில் ருஷ்யாவின் ஸ்டாலின்
மதிமிகும் சர்ச்சில் என்னும் அதி வினோதத் தலைவர் (மு)

சரணங்கள்

1	சதி செயும் ஜப்பானும் வெஞ் கதி யழிந்தே சரண துதி செயும் சுதந்திரம் தோன்றிச் செழிக்கும் நாளைத்	சமர் செயும் ஜர்மனியும் கதியடையும் இனியும் தொல்லுலகில் என்னாடும் துணை செயும் மூவராலே	(மு)
2	கிழக்கில் முனை முறிந்தே சழக்கரைத் தெற்கில் மேற்கில் பழக்கமுறும் பண்புள்ளம் பகிர்ந்துண்ணும் பாண்டவர் போல்	கேடுற ஓடும் ஜர்மன் சமர்த்துடன் தாக்கித் தீர்க்கப் பழுத்த கனியாம் நட்பைப் மகிழ்ந்திடும் மூவர் தேர்ந்தார்	(மு)
3	சிங்கமெனும் சர்ச்சிலும் அங்கமிகும் யானை நேர் பொங்கும் படைப் பலத்தில் வங்கின் நரியாம் ஜர்மன்	சிறந்த புலி ஸ்டாலினும் அமெரிக்காவின் ரூஸ்வெல்ட்டும் போர்க்களம் போந்து தாக்கில் பங்கமுறக் கேட்பானேன்	(மு)

* இப்பாடல் திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் நிலைய கோஷ்டியாரால் 16-12-43 மாலை 7-10 மணிக்குப் பாடப்பட்டது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.